உ
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார், அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி க. } நளஃஸு சித்திரை மீ 1916ஃஸு ஏப்பிரல் மீ { பகுதி. ரு.

புதல்வர் கடமை.

(32—ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை அன்பொடு பெற்று வளர்த்த தாய் தந்தையரது அருமை பெருமைகளை உள்ளபடி அறிந்துணர அக்கரையும், அறிவும், ஆற்றலும் இல்லாதாரது அருவருக்கத்தக்க காரியங்களை இதுகாறும் எடுத்துரைத்து வந்தோம். இனி, "பெற்றோரினும் உற்றோர் ஒருவரும் இலர்" என்பதை, மெய்யன்புள்ள தாய் தந்தையர், தம்மக்கள் விஷயமாகச் செய்துள்ளவற்றைக் கொண்டு விளக்கிக் காட்டுவோம்:

இவ்வுலகில், மனிதப் பிறவி வாய்ந்தோர் எய்தும் மகத்தான பாக்கியங்கள் யாவினும் தலைசிறந்தது, 'மதியும் ஆண்மையும் மாசிலா ஒழுக்கமும்' வாய்ந்த நன் மக்கட் பேறே வம்சத்திற்கு ஒரு சற்புத்திரனேனும ஜனிப்பனுயின் அவனால் ஏழு தலைமுறைக்கும் நன்மையுண்டு; துன்பமும் தீவினையும், அக் குடும்பத்தைச் சென்று அடையா. ஆதலால் 'சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை' எனப் பெரியோர் பல்வேறு விதங்களில் வற்புறுத்திக் கூறியதை வினைந்து, மகவிலாக் குறையால் மனம் வருந்தி, அக்குறை நிவிர்த்தியாமாறு,

கண்டகண்ட கோவிலுக்குக் காணிக்கை கள்செலுத்தி
அண்டரிய தீர்த்தங்கள் ஆடிவந்து—தொண்டர்களாம்

ஆண்டியா தேசிகளுக் கன்னம் படைத்துமிக
நீண்டஅர சுக்குநிதம் நீர்ஊற்றி—ஆண்டுதொறும்

சஷ்டி சமாரா தனைநடத்திச் சஷ்டிதொறும்
இஷ்டமுடன் உண்டியெதும் ஏலாது—கஷ்டமுடன்

தேகத்தை வாட்டித் தெளிந்தோர்கள் சொற்படியே
நாகப் பிரதிஷ்டை நன்கியற்றி—மேகத்தை

அண்ட உயர்ந்த அரசுக்கும் வேம்புக்கும்
மண்டு விருப்பால் மணமுடித்துப்—பண்டை

மறையோர் உரைத்த வகைமற்றும் ஆராய்(ந்து)
இறையோனை உள்ளத் திருத்தி—முறையுணர்ந்த

காதலரைப் பெற்றுக் களிப்புக் கடல்மூழ்கக்
'காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு

பட்டதே இன்ப' மெனப்'பட்ட படிநடந்தே
எட்டுணையும் தம்நயமே எண்ணாது—முட்டுற்ற

பித்தரைப்போல் ஏங்கிநிற்கும் *பெட்புமிகு பெற்றோர்கள்
எத்துணைபபே ரைக்கண்டு ளோம்!

வேறுவேறு சரீரம படைத்த தாயும் தந்தையும், தமக்குள் வேறுபாடேது மின்றிச் சரீரமும் மனமும் ஒன்றுபட்டு, இங்ஙனம் மகப்பேறு கருதி,'அருந்தவங்கள் செய்து, அருநிதியம் ஈந்து, பெருந் §நோன்புகள் மேற்கொண்டு' பேணும் விஷயத்தை இத்துடன் நிறுத்தி, அவர்கள் தனித்தனியே புதல்வர் சம்பந்தமாக ஆயிரம் பாடு அரும் பாடு படும் விஷயத்தை விளக்குவோம்:

முதலாவது 'முன்னறி தெய்வம்' எனும் இரண்டினுமே முன்னறி தெய்வமா நிற்கும் அன்னையினது செயற்கரிய செயல் களைச் சிறிது நன்கு கவனியுங்கள்!

"மூந்தித் தவங்கிடந்து முன்னூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துச்—தொந்தி சரியச் சரிய"

மக்களைப் பெறுதற்கு முன்பு, ஓர் நற்றாய், "வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும் (அதாவது, கர்ப்பம் தரிப்பதனால் உண்டா

*பேட்பு—ஆசை. §நோன்புகள்—விரதங்கள்.

கும் மசக்கை நோயையும், கருவைப் பொறுத்துத் திரியும் காலத்தில் வரும் துன்பத்தையும், பிரசவிக்குங்காலத் துண்டாகும் பெரிய உபத்திரவத்தையும்) எவ்வளவு சகித்துத் தீரவேண்டியிருக்கிறது! "அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும்" என்னும் பழமொழியும், "பிரசவ வைராக்கியம்" என்பதன் கருத்தும், "வந்தி பரிவாய் மகவைப் பெறுந் துயரம், நொந்(து) அறிகு வாளோ துவல்" என்னும் நீதிவெண்பா அடிகளும், "பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம, பிள்ளை பெறுப் பேதை அறிவாளோ" என்ற தாயுமானவர் வாக்குமே, மாதர்கள் கருவுயிர்க்கையில் எய்தும் பொறுத்தற்கரிய நோவை விளக்கப் போதியவை.

மறுபிறவியே எனத்தகும் இம் மகத்தான கஷ்டத்திற்கு உள்ளாகியும், அவளுற்ற கஷ்டம் யாவும், தான் விரும்பிப் பெற்ற குழந்தையைக் கண்ட மாத்திரத்தில் உண்டாகும் மகிழ்ச்சி மிகுதியால், மறைந்தே விடுகின்றன அன்றோ? இம்மகிழ்ச்சி அளவிடற்கரியது என்பதை,

"'நின் மகன் சகலகலாவல்லவன்; சற்குணசம்பன்னன்' எனத் தக்கோர் சொல்லக் கேட்ட தாய், அம்மகனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியே அடைவள்" என்னும் கருத்துற

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

எனக் கூறிய தேவர் வாக்கால் அறிக. (இக்குறளால், 'தாய், மகனைப் பெற்றதில் மட்டும் மகிழ்ச்சி கொண்டவளல்லள். அம்மகன் கல்வி அறிவு ஒழுக்கங்களிற சிறந்தோனுவதில், அவளுக்கு, அவனைப் பெற்றதினும பெருமகிழ்சசி உண்டு' எனபது இனிது விளங்கும்.)

இம்மகிழ்ச்சி விளங்கக் கூறப்பட்டுள்ள புறநானூற்றுச் செய்யுள் ஒன்று நம் ஞாபகத்தில் வருகிறது. அச்செய்யுளில் அடங்கிய விஷயத்தை விரித்துக் கூறுவாம்:

யுத்தம் வெகு மும்மரமாக நடந்துகொண்டிருக்கையில், தான் அந்திய காலத்திற் பெற்ற ஒரே சிறுவனையும் யுத்தத்திற்கு அனுப்பியிருந்த கிழவி ஒருத்தி, அம்மகனைப்பற்றிய சிந்தனை ஏது

யின்றி, தேசாபிமான மேலிட்டால், யுத்த முடிவையே அறியப் பேராவல் கொண்டு, தான் சந்தித்த பலரையும் "இன்றைய யுத்தத்தில் ஏதேனும் விசேஷ முண்டோ?" என்று அடிக்கடி விசாரிக்கலாயினள். கிழவியின் ஆத்திரத்தைக் கண்ட சில குறும்புக்கார வம்பர்கள் "பாட்டி! ஐயோ பாவம்! காலமில்லாக் காலத்திற் பெற்ற நின் கான்முளையைப் பொருகளம புக அனுப்பிய நின் பேதை மதி யிருந்த வாறென்னே! அவன் சிறுவனுதலின், பகைவர்களின் முன் நிற்க அஞ்சி, முதுகு காட்டி ஒடினன். ஓடுகையில் அவன் பலவிடங்களிற் குத்துண்டு இறந்தானும்" என்று சொல்லிப் போயினர். தனது ஒரேமகன் இறந்த அதிதுக்கச் செய்தி கேட்டும் அவள் விசனிக்கவில்லை. ஒரு சொட்டுக் கண்ணீரும் உகுக்கவில்லை. "என் மகன்போரிற் புறங்கொடுத்து ஓடியது உண்மையே யாயின், அவன் பால் உண்டு வளர்தற்குக் காரணமாக இருந்த எனது இம் முலைகளை அறுத்தே எறிகிறேன்" என்று சினந்து கூறிக் கையும கத்தியுமாக யுத்தகளம சென்றனள். சென்றவள், தரையில் வெட்டுண்டு வீழ்ந்து கிடக்கும் பிணக் குவியல்களையும, உடற் குறைகளையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தனள் பார்க்கையில் தனது அருமைக் குமாரனது சவம் தென்பட்டது. அதன் மீது படுகாயங்கள் பல இருந்தன. இக்காயங்களில் ஒன்றேனும் அவன் முதுகில் இல்லை. யாவும் அவனது மார்பகத்திலேயே இருக்கக் கண்டனள். தான் முன் கேட்டது வம்பர் மொழி என உணர்ந்த அத்தாய்க்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவுண்டோ? மகனது அதிபயங்கரணத்தையும், அதனல் நேர்ந்த மரணத்தையும் கண்டு மனஞ்சலித்து வாய்விட்டரற்றினளோ? இல்லை; இல்லை, இக்காலத்திய பலரைப்போல் தேசாபிமானியாக இருந்தால் அல்லவோ கண்ணீர் விட்டுக் கரைந்தழுவள்? க்ஷத்திரிய தர்மம் தவறாத உத்தம தேசாபிமானியாதலால் "அவனைப் பெற்றபோது, தான் அடைந்த ஆநந்தத்திலும் அதிக ஆநந்தமடைந்தனள். இவ் வீரத் தாயைப் போல் "ஈன்றுபுறந் தருதல்" தாய் "இனிதிவத்த"லின் இயற்கை புறநானூற்றுச் செய்யுட்கள் வேறுசிலவற்றாலும் அறியலாம்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

கடிகாரம்.

சீர்பெறுங் கலைச் சிறப்புடை யோர்கள்
ஏர்பெற விளங்கும் இமமே தினியில
மடிமேற் கொண்ட மானிடன் போலிராக்
கடிகாரம் என்னும் கருவி! நின்செயலை
என்னெனச் சொல்வேன்! யாதென வகுப்பேன்!
நின்னைப போல்இந் நீணில மதனில்
தன்னமுஞ் சலியாச் சதுரரும் உளர்கொல்?
என்னே நின்செயல்! எல்லி மறைந்து
மினன துடனே பிருமழை காற்று
வர்தகா லத்தும் மண்ணுல குள்ளோர்
மணிதெரி யாமல் மயங்கிடுங் காலையில்
சிறிதும் தவறு தறிதரக் காட்டுவை.
உன்னை விரும்புநர் உளத்தின் படியே
ஒருநாள் கொல்லோ, ஒருவா ரம்கொலோ
ஒருவரு டம்கொலோ, ஓயா துழைக்கும்
தாமுடைப் பொருளாச் சமையப் பெற்றனை.
உத்தியோ கத்தில் உற்றவர் யார்க்கும்
அத்தன் மையினில் ஆறுநாள் இருக்கின்
ஒருநாள் விடுமுறை உண்டு. அஃ தன்றியும்
‘திருநாள்’ என்றும் ‘ஜென்மநாள்’ என்றும்
வருநாள் எல்லாம் வாய்த்தன விடுமுறை.
உள்ளநாள் அளவுமீ உழைத்தலே அன்றிக்
கொள்ளலை முன்னம் கூறிய ஏதும.
வாரங் காட்டுவை; மாதங் காட்டுவை;
நேரங் காட்டுவை, நிமிடங் காட்டுவை;
விநாடி காட்டுவை: வேண்டிய போதில்
உணுது நாதம் ஒலித்திடச் செய்வை.
வார்த்தை பொருந்த மானிடன் நின்னைப்
பார்த்துச் சற்றும் பரிவில னாகித்
தலையிற் றிருகவும், சான்றநின் மார்பினை

2. ஏர்—அழகு, 3. மடி—சோம்பல், 7. தன்னமும்—எப்பொழுதும், 8. எல்லி-பகற்பொழுது, 12. அறிதா—அறிய, 16. தாம்—தன்மை, சமைய-அமைய.

நிலையிற் றிருகவும், நின்பின் னம்புறம்
திருகவும், சற்றும சேர்கிலை துயரம.
என்னே நின்பொறை! யார்க்குள திவ்வயின்?
இம்மட் டோ?இனும எதிர்முக மாக
வந்திடும் ஒருவன் 'மணிஎன்?' எனவே
அந்த வேளையில் அயலவன் அவற்குத்
தந்த தோர்விடை தானபெற் றனனாய்
அந்நே ரத்தில் அவன்உனை தூக்குவன்;
பார்ப்பன்; சரியெனிற் பரிவுடன் இருப்பன்.
இலையெனில், உன்னை இருபுறத் திலுமவன்
திருகுவன்; சிறிதுஞ் சிணுங்கவும் செய்கிலை.
என்னை?நின் பெருமை யாரடைந்துள்ளார்?
இருக்கும் வரையும் இரவும் பகலும்
பரோப காரப் பண்புளோர் நின்போல்
தாரதலந் தன்னிற் சாற்றவும் உளர்கொல்?
என்னே நின்செயல்! யாருனை நிகர்ப்பார்?
காலையில் வேதியர் கடன்செய எழுப்புவை.
வேலையில் உள்ளவர் வேலை செயச்செலும்
பொழுதிது வெனச் சொலிப் புறப்படச் செய்வை.
விழுமிய கல்வி விழையுமா ணவர்க்குப்
பழுதகல் ஆசான் பாடம ஈந்திடும்
நேரமிவ் வளவென நிச்சயம் செய்குவை.
மானிடர் பாலெலாம் மாறுதல் இன்றித்
தானிடம் கொண்ட தயாபரன் என்னப்
பார்த்திபன் முதலாப் பாமரன் ஈறாப்
பார்த்தவர் இடதெலாம் பாங்குடன் இருப்பை.
என்னே நின்செயல்! ஈசுரச் செயலே:
இரண வைத்திய சாலையில் ஏற்ற
தருணம் காட்டித் தனிஉயிர் தருதற்(கு)
உதவி நினையலா தொன்றுவே றுளதோ?
இதனினும் உதவி யாதோர் இசைக்கின்?

33. வயின்-இடம், 50. விழுமிய-சிறந்த.

இத்தகு சீரெலாம் எய்ந்துள நின்னை
ஆக்கியோன் மனிதனே அன்றோ செப்பின்?
மனிதன் செய்நீ மாறிலை நின்றொழில்.
ஆயினும் நின்னை ஆக்கிய மனிதரிற்
பல்லோர் காலப் பண்பறி யாராய்க்
கடமை மறந்துதம் உடல்வளர்க் கின்றனர்!
நன்றே கொல்லிது! நவையிது அன்றோ?
ஆயினும் இனிமேலாயினும் அவரைத்
தம்செயல் தாழா துஞற்றச் சாற்றுதி
இத்தகைக் குணங்க ளிருக்கும் உன்னை
யார்விரும் பார்கள்? யாரபே ணார்கள்?
சீரிடை வைப்பர்; சிறப்புடை ஊரில்
நான்முகம் உளதாய் நாலா பக்கமும்
காண உயர்நிலை வைத்துக் காண்பர்.
கையிலும் வைப்பர்; கவின்பெட் டியிலும்
பையிலும் தனித்தனிப் பாங்காய் வைப்பர்.
என்னே நின்குணம்! என்னே நின்புகழ்!
யாருரைப் பார்கள்! யார்தர முள்ளார்!
இன்றே நின்றன் இயற்கைக் குணங்களை
நன்றறிந் தனன். நீ நாளும்வா ழியவே.

70. உஞற்ற—செய்ய.

A. R. ஸ்ரீநிவாச முதலியார்,
ஆனைமலை.

விவேக சந்திரிகா.

(37-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு நாள் அஜா ராஜன் தருணசந்திரனுடனும், மற்றுஞ்சில நண்பர்களுடனும் உலாவ நகர்க்கு வெளியே போனான். அவர்கள் ஓர் ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர். அச்சமயம் ஆற்றுப் பிரவாஹத்தில், பொன்னிலாகிய [illegible] த, [illegible]ணில் தென்

பட்டன. அரசன் வேலைக்காரனை யனுப்பி அம்மலர்களைக் கொண்டு வரும்படி செய்து தனதருகிலிருந்த தருணசந்திரனைப் பார்த்து, "இப்பொற்றாமரைகளைக் கண்டு எனக்கு வெகு ஆச்சரிய முண்டாகி யிருக்கிறது. நீ தயை செய்து இவ்வாறறின உற்பத்தி ஸ்தானம் வரையில் சென்று, இம்மலர்கள் எஙகே, எவவாறு உண்டாகின்றன என்பவறறைக் கண்டறிநது வருக" என்றுரைததுத் தனது நகரத் திற்குச சென்றான். அவ்வைத்தியன் அரசன் காட்டிய வழியைப் பின்பற்றிப் பிரயாணஞ் செய்யலானான்.

இவ்வாறு அவன் செல்லுகையில் ஆற்றங்கரையில் ஒரு சிவால யம் தென்பட்டது. அவ்வாலயத்திற்கு எதிரில் ஆற்றங்கரையில் ஒரு ஆலமர மிருந்தது. அவ்வாலமரத்தில் ஒருமனிதனுடைய எலு ம்புக் கூடு தொங்கிக் கொண்டிருந்தது. தருணசந்திரன் வழிநடந்த சிரமத்தால் களைப்படைந்து நதியில் ஸ்நானம்செய்து சிவனைப் பூஜி த்து, சிரமபரிகாரஞ் செய்து கொள்ள உட்காருகையில் வானம் இருண்டு மழைபொழியத் தொடங்கிற்று. அம்மழை ஆலமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த எலும்புக் கூட்டின் மீதும் விழுநதது. அக் கூட்டிலிருந்து மழைஜலம் அம்மரத்துக்குக் கீழே ஓடும் ஆற்றுநீரில் விழுந்தது. உடனே அதிலிருந்து பொற்றாமரைகள் உண்டாயின. இது கண்ட வைத்தியன் இஃதென்ன ஆச்சரியம்? உண்மை விசா ரிப்போமென்றால இவ்விடம் ஒருவரையுங் காணோமே? அதிவிசித் திர பிரம சிருஷ்டியின் வல்லமையை அறியவலலார் யாவர்? இப் பொழுது இவ்வெலும்புக் கூட்டிலிருந்து நீர்த்துளிகள் ஆற்றில் விழுந்து பொற்றாமரைகளாகின்றனவே. இத்தீர்த்தத்தில் அக்கூட் டைத் தள்ளிவிடுகிறேன். அங்ஙனம் செய்வேனேல் அதன் முதுகி லிருந்து பொற்கமலங்கள் உற்பத்தியாகும். இது பொய்க்குமாயின் அதைத் தீர்த்தத்தில் போடுவதனால், எனக்கு அதை அக்கினி ஸம் ஸ்காரஞ் செய்த புண்ணியமாவது கிடைக்கட்டும்' என்று ஆலோ சித்து மரக்கிளையிலிருந்து அக்கூட்டை ஜலத்தில் தள்ளினான். அப் பொழுது அதன முதுகிலிருந்து பொற்றாமரைகள் உண்டாகக் கண் டான்.

பிறகு வைத்தியன் மறுதினம் அவ்விடம் நீங்கி, விலாஸபுரம் வந்து, சங்கதி முழுமையையும் அரசனிடம் தெரிவித்தான். அப்

அப்பொழுது காவலன் வைத்தியனைப் பார்த்து "நண்ப! நீ கண்ட பொற்றாமரை உள்ள இடம் சிவபிரானது புண்ணிய க்ஷேத்திரம்; அவ்விடம் ஆலமரத்தில் நீகண்ட எலும்புக்கூடு என்னுடைய பூர்வ ஜன்ம தேகம். நான் முன்ஜன்மத்தில் அக்ஷேத்திரத்தில் அவ்வால மரத்துக்கிளையில் தலைகீழாகத் தவம் செய்து உபவாஸமிருந்து என் தேகத்தை விட்டேன் எனது தவ மஹிமையால், என் எலும்புக் கூட்டிலிருந்து விழும் நீர்த்துளிகள் ஆற்று நீரில் விழும்பொழுது அதிலிருந்து பொற்றாமரைகள் உண்டாகின்றன. அக்கூட்டை நீ நீரில் தள்ளியது சிறந்த காரியமாகும். ஏனெனில் நீ பூர்வஜன்மத்தில் எனக்கு நண்பனுயிருந்தாய். இந்த பிஷக்சந்திரனும், பத்மதரிசன னும் கூட அந்த ஜன்மததிலேயே எனக்கு நண்பர்களாயிருந்தனர். பூர்வஜன்மத் தவமஹிமையால் எனக்குப் பூர்வஞானமிருக்கிறது. இந்த இராஜ்யமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விஷயத்தை நான் உனக்கு ஒரு யுக்தியில் காட்டினேன். நீ நீரில தள்ளிய எலு ம்புக் கூடடை நான அடையாளம் சொல்லி எல்லா விஷயத்தையும் தெரிவித்தேன். ஆகையால் நீ "இவனுக்கு நான் இராஜ்யம் கொடுத் தேன்" என்று கொள்ளும் கர்வத்தை விட்டுவிடு. உன் வீண் கவலை யை ஒழி. முன்னிருநத அரசன் நிஷ்காரணமாக மரணமுற்றதற் கும் காரணம் அறிவேன்; ஆயினும் அவனைப் பொருளாசையாற் கொன்ற மகாத் துரோகியான உனக்கு அதை வெளியிட எனக்கு மனமில்லை. கூடிய சீக்கிரத்தில் நீ அவனினும் கொடிய மரணம் அடைவை. மறுமையிலும் மகத்தான துன்பம் அனுபவிக்க வேண் டியவனே. மனிதனுக்கு நன்மை தீமைகளைக் கொடுப்பது முற்பிறப் பிற் செய்த இருவினையுமேயன்றி வேறல்ல. எப்பிராணியும் பிறந் ததுமுதல் இறக்கும்வரை பூர்வஜனமத்தில் செய்த பலனை அநுப விக்கவேண்டியதே" என்றான்.

இவ்வாறு இறைவன் செய்த உபதேசத்தைக் கேட்டுத் தருண சந்திரன் நல்வழிப்பட்டு மன்னவனை ஸேவிப்பதே தனக்கு சுகமென் றெண்ணித் தன்வீடுபோய்ச் சேர்ந்தான். உதாரகுணசீலனும பூர்வ ஜன்மஞானம் பொருந்தியவனுமான அரசன், தருணசநதிரனுக்கு வேண்டிய தனங்கொடுத்து அவன் யோக்கியதைக்குத் தக்கபடி மரி யாதை செய்தான். பின்பு வேந்தன் பகைவர்கள் பாதையின்றி,

கிடைத்த இராஜ்யத்தை நீதிவழுவாது பரிபாலித்துக் கொண்டு தனது ஸ்திரீகளுடனும் நண்பர்களுடனும் வாழ்நாட்களை இன்பமாய்க் கழித்தான்.

இச்சரித்திரத்தால், சிற்றின்ப சுகத்திலேயே மூழ்கியிருப்பவர்கள் கெடுவார்களென்பதும், தீயோர் மூடர்களை எதுவும் செய்ய அஞ்சார் என்பதும், மன்னவனாயிருப்பவன் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டு மென்பதும், ஜனங்கள் ஒரு காரியத்தின் உண்மையை யறியாமல் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' எனக் கூறுதற்கு அறியாமையே காரணமென்பதும், இவ்வுலகில் நிகழும் இன்ப துன்பங்களுக்கு அவரவர்களின் வினையே காரணமென்பதும் 'ஒன்றை நினைக்கினது வொழிந்திட் டொன்றாகும்' என்பதும், பிறவும் எளிதிற் புலனும். சுபம்.

பண்டிதர் எம். எம். நாராயணசாமி ஐயர்.

கமலாவதி.

அங்கம்-1.

காட்சி-4.

இடம்:—கேகயநாட்டில் ஓர் ஆற்றோரம். காலம்:—அதிகாலை.

[அப்பு சாஸ்திரி ஓர் மரத்தடியில் சயனித்திருக்க, சற்று தூரத்தில் மாறு வேடத்துடன் ஸ்ரீதானும், ஜயகேசரியும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.]

ஸ்ரீ ஜயகேசரி! இக்கேகய நாடும் மிகவும் செழிப்பாகத்தான் இருக்கின்றது. இப்படி உட்கார். சற்று இளைப்பாறிய பிறகு ஆற்றில் ஸ்நானம் செய்து செல்லலாம்.

ஜய. அப்படியே செய்வோம்.

[இருவரும் உட்காருகிறார்கள்.]

அரசே! நாம் நமது நாட்டைவிட்டுப் புறப்பட்டு வெகு

காலம் ஆகிவிட்டதே! தங்கள் வரவை மகாராஜா எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். எப்பொழுது நாட்டிற்குப் புறப்படுவதாக உத்தேசம்?

ஸ்ரீ இப்பொழுதென்ன அவசரம்? இன்னும் பிற தேசங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு பிறகு செல்லலாமே.

ஜய. அப்படியே செய்வோம். ஆனால், சீக்கிரம் நாம் நமது காரியத்தை முடித்துக் கொண்டு, நமது நாட்டிற்குப் புறப்பட வேண்டும்.

ஸ்ரீ அதற்கென்ன பார்த்துக் கொள்வோம். ஜயகேசரி! மிகவும் களைப்பாக இருக்கிறதினால் ஆலயத்திற்கு மாத்திரம் சென்று வருவோம். நாளை நகர் சுற்றிப் பார்ப்போம்.

ஜய. அப்படியே செய்வோம்.

[சோமு தீக்ஷதர் பிரவேசிக்கிறார்.]

சோமு. யாரங்கே மரத்தடியில் படுத்திருக்கிறது?

[அப்பு சாஸ்திரியின் சமீபத்தில செல்லுகிறார்.]

பூ! இந்தச் சோமபேறிதானா இங்கே விழுந்து கிடக்கிறது? சரிதான்.

அப்பு. வாருங்காணும், சோமு தீக்ஷதர்வாள்! நான் இங்கே வர்ற போது வழியிலே உங்காத்தில் வந்து பார்த்தேன். நீங்க இல்லே. எங்கேயோ வெளியிலே போயிருக்கதேளுன்னு பொம்மனாட்டியள் சொன்னா. சரீன்னுட்டு இங்கே வந்துட்டேன். கொஞ்சம் சிரமமா இருக்குன்னு படுத்துக்கிண்டேன்.

சோமு. உம்முடைய சோம்பல் உம்மைவிட்டு ஒருபோதும் போகப் போகிறதில்லேங்காணும். இந்த சோம்பல் தொலேஞ்சாத்தான் உமக்கு க்ஷேமகரம். அதுவரையிலே ஒம்மைப் பிடிச்ச தரித்திரம் ஒம்மைவிடப் போகிறதில்லே. போங்காணும் போம். பிழைக்கத் தெரியாத பிராமணா!

அப்பு. நீர் தான் இருக்கிறே ஸொயகார்யப்புலி. என்ன ஆப்பிட்டாலும் காட்டாமல் சுத்திக்கிண்டு போறத்துக்கு. உம்முடைய சமாசாரம் தெரியாதோ!

சோமு. சரி, வெட்டிப் பேச்சேன் பேசறீர்? என்னோடே வந்தா உமக்குச் சரியா வரும்படி பண்ணி வைக்கறேன். என்ன சொல்றீர்?

அப்பு. (பல்லேக் காட்டிச் சிரித்துக் கொண்டு) அப்பாடா! இப்பத்தான் என் பேரிலே ஒமக்குத் தயவு வந்ததாக்கும்?

சோமு. (சற்றுக் கோபத்துடன்) ஆ! என் பேரிலா தப்பு! சுத்த சோம்பேறி நீர் ஓய்! ஒரு அடிகூட எடுத்து வைக்காம விருந்தா, தானதருமம் பண்றவன் உம்மைத் தேடி வந்து கொடுப்பானின்னு நெனச்சீரோ? அப்படிக் கொடுத்தாலும் வாங்கிக்க உமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும் போல் இருக்கு.

அப்பு. சரி, கோவிச்சுக்காதேயும் [ஆவலுடன்] அதிருக்கட்டும்ணு. வரும்படி யின்னீரே: எங்கே? எவ்விடத்திலே?

சோமு. உலக நடவடிக்கையே உமக்கு ஒன்றும் தெரியாது. நீர் எப்படித்தான் பிழைக்கப் போகிறீரோ! மாளவநாட்டு அரசனை நம்ப ராஜா சிறைப்படுத்தி விட்டாரே தெரியாதா?

[ஸ்ரீதரனும ஜயகேசரியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.]

அப்பு. ஆமாம், நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். அதிருக்கட்டும், மாளவ ராஜாவுடைய புள்ளே ஸ்ரீதரர் சண்டையிலே ரொம்பக் கெட்டிக்காரராமே, அவரை நம்ப ராஜா எப்படிங் காணும் ஜெயிச்சார்?

சோமு. இது தெரியாதா ஒமக்கு? ஸ்ரீதரர் மாளவ தேசத்திலே இல்லியாம். எங்கேயோ தேச சஞ்சாரம் செய்யப் போயிருக்காராம். இந்தச் சமயம பார்த்து, நீரப்புலி, நம்ப ராஜா விக்கிரமகேது, மாளவ தேசத்தைப் படையெடுத்து அந்த தேசத்து ராஜாவைப பிடிச்சூட்டாராம். அத்தோடே போச்சா? அவருடைய மந்திரி ஜயசேனரின்னு ஒருத்தர் இருந்தாராமே. அவரையும் நமப ராஜா கொன்னூட்டாராம்.

ஜய: [கண்ணீர் பெருக] ஆ! ஹா!

ஸ்ரீ [அவன் கண்ணீரைத் துடைத்து மெதுவாக] ஸ்! ஸ்! பேசாமலிரு, அவர்கள் சொல்வதைப் பூராக் கவனிப்போம.

அப்பு. ஆமாங்காணும், அதுக்கும் நம்ப வரும்படிக்கும் என்னங் காணும் சம்பந்தம்?

சோமு. அதுக்குள்ளே என்ன அவசரம்காணும் உமக்கு? உம்—உம்—நம்ப—ராஜா—சண்டையிலே ஜெயிச்சு வநத சந்தோஷத்திலே லக்ஷப் பிராம்மண போஜனம் செய்யப் போறாராம்.

அப்பு. இதுதானு? என்ன சொல்லப் போறீரோன்னு இருந்தேன்—"வாத்தியாரே! வாத்தியாரே! பொண்ணு தொண்டது" இன்னும். பொண்ணு தொண்டா வாத்தியாருக்கு என்ன ஆச்சு? லக்ஷப் பிராமண போஜனம் அவன் செஞ்சா, எல்லாருக்கும் கெடைக்கிறது போலே, நமக்கும் ஒருவேளைச் சோறு கெடைக்கிறது. இந்த நாறச் சோறு என்ன பிர்மாதமா? பிராமணார்த்தத்துக்கு ஒக்காந்தாலும் கெடச்சூட்டுப் போறது.

சோமு. பார்த்தியா? பார்த்தியா? ஒரே நாளில் ரெண்டு தரம் செல சமயங்களிலே பிராமணார்த்தம் சாப்பிட்டிருக்கோமே! சோறுகெடெக்காதுன்னு சொன்னேன். பிராம்மணுளுக்கு சகட்டு மேனிக்குத் தலைக்கு ஒரு பவுனும் தக்ஷணை. கொழுந்தைகளுக் கெல்லாம் அரப் பவுனும். அதன்னு காணும் சொல்ல வந்தேன்.

அப்பு. என்னன்னாலும், நீர் அதிஷ்டசாலி அதிர்ஷ்டசாலிதான். நமக்குப் பொறக்கற தெல்லாம் சனியங்கள் பொண்ணுவா பொறக்கணும்: இந்த ரெண்டு குட்டிகளும் புள்ளேகளா இருந்தா, டோக்கா ரெண்டு பவுன் தட்டிடலாமே

சோமு. ஒமக்குப் பொழெக்யற வழிதெரியலே. அதுக்கு யார் என்ன செய்யறது? குட்டிகளுக்குத் தலெயெ வாரிமுடிய—இடுப்பிலே சோமனைக் கட்ட — பூணல் ஒண்ணெ மாட்ட—கூட்டிக் கிண்டுபோக — இவ்வளவு பெரிய கூட்டத்துலே யாரு கவனிக்கப் போறா? தப்பித் தவறிக் கேட்டா திருப்பதிப் பிறார்த்தனெ இங்கறது,

அப்பு. என்ன இருந்தாலும், நீர் கெட்டிக்காரர்தான். ஏதோ, ஏழெக் குடும்பத்தெக் காப்பாத்தற புண்ணியம் ஒமக்கு. "பிராமணோ, பிராமணப் பிரியா" இன்னுகூடச் சொல்லி இருக்காளோல்லியோ.— ஆமா, ஒம்மெ ஒண்ணு கேக்க ணும். நம்ப ராஜா, மாளவ ராஜாவின் புள்ளெ ஊரிலே யில்லாத சமயம் பார்த்து அவருடன் சண்டெக்குப் போனுரே. அந்த ராஜா புள்ளெயெக் கண்டா—அவ்வளவு பயமா நம்ப ராஜாவுக்கு?

சோமு. அதேஞ் சொல்றேள்,—எந்தச் சனியன் எப்படிப் போனு நமக்கென்ன? நம்ம பாடு நமக்கு. எந்திருந்து வாரும். ஸ்நானம் செய்துட்டு ஆத்துக்குப் போகலாம்.

அப்பு. ஆமாங்கறேன்.— நாழியாச்சு. போவோம்.

[இரண்டு பிராமணர்களும் போகிறார்கள்]

ஜய. (கோபத்துடன்) இப்படிப்பட்ட கொடிய வஞ்சகர்களை நான் பார்த்ததேயில்லை. இதுவும் ஒரு ஆண்மையா? வாங்கு கின்றேன் பழிக்குப் பழி.

ஸ்ரீ (பெருமூச்சுடன்) ஹா! ஜயசேனரே! ஐயோ! இந்தத் துரோகி கையால் சாகவேண்டுமென்றோ பிரமன் தங்கள் தலையில் எழுதினான்?— நண்ப! ஆத்திரப் படாதே. பதருத காரியம் சிதருது.

ஜய. அரசே! இப்படி எல்லாம் நடக்குமென்று யார் நினைத்தார் கள்? ஏதோ நமக்கு இது போதாத காலம். இனி ஆக வேண்டியதைப் பார்ப்போம். தங்களுடைய தந்தையை யாவது உயிருடன் நாம் மீட்க வேண்டும். ஆகையால், நாம் இப்பொழுதே மாளவநாடு சென்று சேனைகளைத் திரட்டி வந்து விக்கிரமகேதுவை எதிர்த்து அவரை மீட்போம்.

ஸ்ரீ அதுவே சரி. ஆயினும், இரண்டொரு நாள் இங்கிருந்த இந்தக் கேகயநாட்டு ஜனங்கள் இவ்விஷயத்தைப் பற்றி என்னென்ன விதமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள் என்று நாம் தெரிந்து கொண்டு, உடனே புறப்பட்டு விடுவோம் புறப்படுமுன் விக்கிரமகேதுவையும் பார்த்துச் செல்வோம்

ஜய. ஆஹா, அதற்கென்ன? அப்படியே செய்வோம்.

[இருவரும் போகிறார்கள்]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்).

K. வேங்கடராமையர்.

சாணக்ய சாகஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(48-ம் பக்கத் தொடர்ச்சி).

பர்வதேசன் கட்டளைப்படி கமலாபீடன் என்ற நியோகி சாணக்யனிடம் சென்றான். சாணக்யன் தந்திரமாக இரண்டு கடிதங்கள் எழுதி, ராஜ முத்திரையிடச் செய்து, அவன் கையிற்கொடுத்து, "நம்பிக்கையுள்ள ஒருவனுடன் உடனே காமருப தேசத்தின் தலை நகர்க்குச் செல். சென்று நான் சொல்லித் தருகிறபடி சகல காரியங்களையும் சாதுரியமாகவும் ஜாக்கிரதையாகவும் முடித்து வா" என்று கூறி, அவன் காதில் ஏதேதோ ஓதினான்.

கமலாபீடன் எவரும் அறியாமல் பிராக்ஜோதிஷபுரம் வந்ததும் ஒரு கடிதத்தைத் தன்னுடன் வந்த தூதனிடம் தந்து "நான் இவ்வூருக்கு வெளியில் உள்ள உத்யான வனத்தில் தாமதிக்கிறேன். நீ என் இருப்பிடம் அறியாதவன்போல "பர்வதேசனால் அனுப்பப்பட்ட காரியஸ்தன் இங்கு வந்திருக்கிறானே, அவன் எங்கே தங்கியுள்ளான்? அதிஅவசரமான ராஜ காரிய ஸம்பந்தமாக அவனை உடனே பார்க்கவேண்டியிருக்கிறது" என்று அரசனது வேவுகாரர் காது கேட்க அவர்கள் தங்கும் சாவடிக் கருகில் நின்று விசாரி" என்று கூறிப் பின்பவன் செய்ய வேண்டியவைகளையும் கற்பித்தான்.

அவன் அங்ஙனமே சென்று விசாரிக்கையில் வேவுகாரர்கள் தமது இயற்கைப்படி அவனைச் சந்தேகித்துப் பிடித்து மடியைச் சோதிக்கையில், கமலாபீடனுக்கு எழுதப்பட்டுப் பர்வதராஜனது முத்திரைகொண்ட கடிதம் ஒன்று அகப்பட்டது. அவர்கள் அதனைப் பிடுங்கிக்கொண்டு, தாம் பிடித்த ஆளுடன் ராஜ ஸந்நிதானம் சென்று "இவன் அயல் நாட்டரசனது ஆள்; இவ்வூரில் ஏற்கனவே வந்து எக்காரணம் பற்றியோ மறைந்து திரிகிற கமலாபீடன் என்னும் பர்வதேசனது காரியஸ்தன் ஒருவனுக்குக் கொண்டு வந்துள்ளகடிதம் இது," என்றனர். உடனே, காமரூபதேச அரசனான சூர்யவர்மன், அக்கடிதம் கொண்டு வந்த தூதனிடமிருந்து கமலாபீடனது அங்க அடையாளங்களைக் கேட்டறிந்து "கமலாபீடன் எங்கிருந்தாலும் அவனைப் பிடித்து வருமாறு கட்டளையிட்டான். இரண்டொரு மணிக்குள் சர்வாபரண பூஷிதனாய்க் கமலாபீடன் ராஜஸந்நிதானம் வந்து நின்றான். கண்டோர் யாவரும் அவன் அணிந்திருந்த காந்திமிக்க நகைகளைக் கொண்டு, பர்வதேசனது செல்வ வளமையைப் பற்றிப் பலவாறு தமக்குள் வியந்தோதினர். அரசனும் அதி ஆச்சரியம் அடைந்தான். கமலாபீடன் அரசனுடைய யோகக்ஷேமங்களைப் பர்வதேசன் விசாரித்த

தாகச் சொல்லித் தன்னிடத்தில் சாணக்யன், தந்த ஓர் கடிதத்தை அவன் கையிற் கொடுத்தான். அதைப் பிரித்துப் பார்த்ததும், சூர்யவர்மன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. பர்வதேசன் தனது மகன் மலயகேதுவுக்கு சூர்யவர்மனது ஜ்யேஷ்ட புத்திரியை மணஞ் செய்விக்க வேண்டுமென்று பிரார்த்தித்து எழுதியதுபோல் எழுதப்பட்ட கடிதம் அது. "இதனினும் தக்க ஸம்பந்தம் ஏதுமில்லை" என்று காமரூப அரசன் மகிழ்ந்து, தன் வேவுகாரர்கள் மூலம் தனக்குக் கிடைத்த கடிதத்திலும் இதே விஷயம் பற்றித்தான எழுதப்பட்டிருக்க வேண்டுமென நிச்சயித்துக் கமலாபீடனை நோக்கி "ஐயா உமது விலாஸத்திற்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது, அதைப் பாரும்" என்று தன்கைக் கடிதத்தைத் தந்தான்.

நியோகி அதைப் பிரித்து வாசித்ததும் சர்வ ஸொத்தும் பறிகொடுத்தவன் போல விசனக்குறி காட்டித் தலை குனிந்து நின்றான். அரசன் அவனது துக்கத்திற்குக் காரணம் கேட்டும் கமலாபீடன் வாய்திறவாது இருந்ததால் கடித விஷயத்தைப் படித்து உரைக்குமாறு தனது மந்திரிக்குக் கட்டளையிட்டான். மந்திரி பின் வருமாறு படிக்கலானான். "கமலாபீட! நீ அரசனைக் கண்டதும் காணாததும் தெரியவில்லை. லம்பாக தேசாதிபதியின் சபையில் நானா அரசர்களின் கீர்த்தி, சௌரியம் முதலியவற்றைப் பற்றிப் பிரஸ்தாபம் நேர்ந்த பொழுது, அத்தேசாதிபதியான கிரிவர்மன், "காமரூபாதிபதியின் வம்சத்திற் கலப்பு தோஷமுண்டு. ஆகையால் அவர்கள் தற்கால சூரர்கள்" என்றானாம். இது நமது ஆப்தர்கள் நமக்கு அறிவித்த விஷயம். பகதத்த மகாராஜனது குலத்துதித்துப் பரம்பரையாக வரும் காமரூபாதிபர் வம்சத்தில் எவ்வித அகாரியமும் நடக்கிராதென்றும், லம்பாக மன்னன், பொறாமையாலும், கொழுப்பாலுமே இத்துச்ச வார்த்தைகளைச் சொல்லியிருக்கலாம் என்றும் நாம் உத்தேசிக்கிறோம். ஆயினும் வெகு காலைக்கு நீடித்த சம்பந்தம் செய்யவேண்டியிருப்பதால், நீ அங்கு நன்றாய் ரகஸ்யத்தில் உண்மையை விசாரித்தறிந்து, உன் மனதிற்குத் திருப்தியாக முடிவு இருக்கக் காண்பாயாயின் அவசியம் மண முகூர்த்தத்தை நிச்சயப்படுத்தி வருக." இக்கடிதம் படித்து முடிந்ததும் அரசன் கல்லடிபட்ட சிங்கம்போற் கர்ஜித்து, "எனது பரிசுத்த வம்சத்தைப் பழித்த படுபாவியான லம்பாகாதிபதி கிரிவர்மனது சிரத்தை நிலத்தில் உருட்டாமல் இக்கிரீடம் தரியேன்" என்று சபதம் செய்து கமலாபீடனை நோக்கி, "ஐயா! மணவினை முடிப்பதில் பர்வதராஜருக்குள்ள மகிழ்ச்சியினும் எனது மகிழ்ச்சி பன்மடங்கு அதிகமே ஆகும். ஆயினும் நீசனான லம்பாகாதிபதியை நிக்ரஹித்தாலல்லது இச்சுப காரியத்திற் பிரவேசிக்க என் மனம் செல்லாது என்பதை பர்வதராஜர்க்கு வணக்கத்துடன் நான அறிவித்துக் கொண்டதாகச் சொல்லும்" என்றான்.

பிறகு கமலாபீடன் அவ்விடம் நீங்கித் தானிருந்த மறைவிடத்தில் சாணக்கியன் உத்திரவுப்படி நான்கு நாள் தங்கினான். சூர்யவர்மன் போர்க்கோலம்பூண்டு லம்பாகாதிபதிமேற் படையெடுத்துச் சென்றது கண்டதும், தனனுடன் வந்த அதனுடன் பர்வதராஜனிடம் சென்று நடந்த விஷயங்களை ஒன்றுவிடாமல் அறிவித்தான் கமலாபீடன். "நல்லவேளையாய் நமக்குஉயிர்ச் சேதம் பொருட்சேதமின்றிச் சாணக்யர் சாமர்த்தியத்தால் சிரிவர்மனது படையெழுச்சியும் விரோதமும், காமரூபாதிபதியால் ஒழிந்தது" என மகிழ்ந்தான் பர்வதேசன். உடனே அவன், நிகழ்ந்த விஷயங்களைச் 'சாணக்யனுக்கு அறிவிக்குமாறும், நந்தர்களை ஸம்ஹரித்துச் சந்திரகுப்தனை மன்னனாக்கினால் தனக்குக் கிடைக்கும் பிரதிலாபம் யாதென அறிந்துவருமாறும், தன்மகன் மலயகேதுவை அனுப்பினான். சாணக்யன், மலயகேது வந்ததும், அவனைத் தக்கவாறு உபசரித்துப் புகழ்ந்து, சமயோசிதமாக வார்த்தையாடி, அவன்வாய்திறந்து கேட்பதற்கு முன்னமேயே, அவனிடம் ஓர் கடிதத்தைக் கொடுத்து, இதை உன் தந்தையிடம் கொடு. காலதாமதமின்றி நந்த ஸம்ஹாரத்திற்கு ஏற்பாடுசெய்க" என்றான். அக்கடிதத்தில், நந்த ஸம்ஹாரத்திற்குப்பின், ராஜ்யம் கிடைத்தவுடன், அவ்ராஜ்யத்திற் சரி பாதி பர்வதேசனுக்குக் கொடுத்துவிடுவதாக சந்திரகுப்தன் ஒப்புககொண்டு கையெழுத்திட்டிருப்பதைக் கண்டான் மலயகேது.

மலயகேது தன்தந்தையிடம்வந்து, பிறர் அபிப்பிராயத்தை அறிவதில் அதிநிபுணனான சாணக்யனது சாமர்த்தியத்தை வியந்து, அக்கடிதத்தைக் கொடுத்தான். அரசன் சந்தோஷித்து, உடனே கௌட தேசத்தைப் படையெடுக்க நானா முயற்சியும் செய்யக் கட்டளையிட்டான்.

சில தினங்களுக்கெல்லாம் சங்கும் முரசும் சப்திக்கப் பர்வதேசனது சேனை அகநர்சினீ என்ற நதிக்கரையில் பாளையம் இறங்கின. அங்கிருக்கையில் பர்வதேசனது ஒற்றர்கள், பகையரசர்களின் வேவுகாரர்களைப் பல்வேறு விதங்களிற் கண்டுபிடித்து வந்து சந்திரகுப்தன்முன் நிறுத்தினர். விசாரணை செய்ததில் அவர்கள் மந்திரியாகிய ராக்ஷஸனால் அனுப்பப்பட்டவர்களெனத் தெரியவந்தது. உடனே சந்திரகுப்தன் சமீபத்தில் நின்ற ஏவலாளிகளை நோக்கி "இம் மூடர்களுக்கு நமது சேனை முழுதும் காண்பித்துச் சவுக்கினால் அடித்துத் துரத்தி விடுங்கள்" எனக் கட்டளையிட்டான். அவர்களும் அப்படியே செய்தனர். சவுக்கடி பெற்றோர் இம்மட்டும் உயிர் பிழைத்தோமே என்று மானினும் தீவிரமாக எடுத்தனர் ஓட்டம்.

இதற்குள் பாடலிபுரத்தில் துர்நிமித்தங்கள் பல தோன்றின. யாவரும் அஞ்சிப் பதறிக் கொண்டிருக்கும்போது, பர்வதேச சேனை கௌடதேசத்

தில் வரவரப் பரவிவரும் விஷயம் பற்பல விதமாக ஒற்றர்கள் மூலமாகவும் வேற்றாட்கள் மூலமாகவும் ராக்ஷஸனுக்குத் தெரியவந்தது. ராக்ஷஸன் தான் கேள்வியுற்ற ஒவ்வொன்றுக்கும் யுக்தியாக சமாதானம் கூறி ஜனபீதியை அடக்கி, "என்ன செய்யலாம்?" என்று தன் மனதிற்குள் மிகக் கவலையோடு யோசித்துக் கொண்டிருக்கும்போதே, பர்வதேசனது சேனைகள் பல இடங்களைக் கைப்பற்றிய விஷயமும் நந்தரது ஆட்களிற் சிலர் யுத்தஞ்செய்யாது நின்றதுடன், அரண்களை வலியவே சத்துருவின் வசம் விட்டுக் கொடுத்து ஓடிவிட்டதையும் அறியலாயினன். சிறிது நேரத்திற்கெல்லாம் சவுக்கடியுற்ற ஒற்றர்கள், சகல சிற்றரசர்களுடனும், மலயகேது, விரோசனன், சாணக்கியன், சந்திரகுப்தன் முதலிய யாவருடனும் அகநாசினீ தீரத்தில் பர்வதேசன் வந்திறங்கி இருக்கும் விஷயத்தை அறிவித்தனர். முப்பத் தாறரை லக்ஷம் பேர்கள் கொண்ட சைனியத்துடன் அவன் வந்திருந்த விஷயம் அறிந்த ராக்ஷஸன் திகைத்துப் போயினன். ஆயினும் அவன் தைரியம் சிறிதும் இழக்காமல், நந்தர்களிடம் இச்சமாசாரங்கள் யாவையும் விவரமாக அறிவிக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டான். பின்பு அவன் தன் நண்பனான தசார்ண தேசத்து அதிபனுக்கு உடனே பர்வதேசனது ராஜ்யத்திற் படையெடுத்துச் செல்லுமாறு கடிதம் அனுப்பினான். பிறகு அவன் நந்தர்களுடன் கூடி ஆலோசித்து, பாடலிபுர சைநியங்களை அனுப்பிப் பர்வதேசனை எதிர்க்க வேண்டுமென்றும், சாமபேத தானத்தால் பர்வதேசனுக்கு உதவிபுரிய வந்திருக்கும் அரசர்களைக் கலைத்து முடிவில் அவனையும் சந்திரகுப்தனையும் தண்டோபாயத்தால் கொன்றுவிடவேண்டுமென்றும் தீர்மானித்தான். இதன்பின் அவன் நந்தர்களிடம் விடை பெற்று ஓர் தனியிடம் சென்று ராயஸக்காரர்களைச் சில ரகஸ்ய கடிதங்கள் எழுத வரவழைத்தான். இவ்வளவு செய்திகளையும் ஒன்றுவிடாமல் அறிந்த ஜீவஸித்தி இச்சமயம் ராக்ஷஸனிடம் ஒன்றும் அறியாதவன் போல வந்தான்.

ஜீவஸித்தி யார்? அவனுக்கு விஷயம் எப்படித்தெரிய வந்தது? எனச் சிலர் ஐயுறலாம். நைமிசாரணியத்து இந்து சர்மனே ஜீவஸித்தி. இப்பெயருடன் பௌத்த சந்யாஸி வேஷந் தரித்துத் தனக்குள்ள வாத, வசிய, சோதிட, மந்திர சாமர்த்தியத்தைக் காட்டி ராக்ஷஸனுக்கு நண்பனாகி, அவனது நம்பிக்கையைப் பெற்றவன். இவனது சிஷ்யர்களிற் சிலர் வேறுவேறு வேஷங்களுடன் அங்கு வேலை பார்த்து வந்தனர். ஆதலின், சகல விஷயங்களும் அவர்கள் மூலமாக அவன் அப்போதைக்கப்போது அறிந்து வந்தது ஆச்சரியமின்றே? நிற்க.

ஜீவஸித்தியைக் கண்டதும், ராக்ஷஸன் மகிழ்ந்து, "எனக்கு இப்பொழுது ஒரு பிரச்நம் சொல்ல வேண்டும்" என்றான். அவன் கிரகபலன்

களைப் பார்ப்பதுபோல் பல நாழிகை நடித்து, "சத்துரு உயிரோடு திரும்பான். காரியமுடிவில் ஜயலாபம் திண்ணம். சத்துருவுக்குச் சகாயமாய் வந்துள்ளவர்கள் பேதத்திற்கு உட்படுவர். அப்பொழுது தண்டோபாயத்தால் சத்துரு நாசம் நிகழும்" என்று உரைத்தான். இதற்குள் சாணக்யன் தன்னிடம் சொன்ன ஒருவிஷயம் அவன் ஞாபகத்திற்கு வந்தது. வரவே அவன் ராக்ஷஸனை நோக்கி, "ஐயா! இப்பொழுது அவசியம் சத்துரு பாதை நிவிர்த்திக்காக நதிதீரத்தில் தக்க ஓர் சுப லக்னத்தில் "சத்துரு நாச ஜபம்" அந்தணர்களைக் கொண்டு செய்தல் நலம். ஜயம் அப்பொழுது நிச்சயம்" என்றான். உடனே ராக்ஷஸன் அஜ்ஜபத்திற்கு வேண்டிய யாவும் கால தாமத மின்றி ஜீவஸித்தி குறித்த சுபவேளையில் செய்யப் பாகுராயணனுக்குக் கட்டளையிட்டான். இஃதானதும், ஜீவஸித்தி கண்களை மூடிக் கொண்டு ராக்ஷஸன் அருகில் தியானம் செய்யும் பாவனையாய் உட்கார்ந்து விட்டான். பாகுராயணன், தனது நண்பன் ஸித்தார்த்தகன் யோசனைக் கிணங்க, கங்கையும் சரயூவும் சங்கமமாகும் இடத்தில் ஜபசாலை அமைத்து, மாஸோபவாஸி என்பவரை ஜபத்திற்கு ருத்விக் (தலைவன்) ஆக இருக்குமாறு கேட்டுக் கொண்டான். மாஸோபவாஸி தன் மனதிற் கியைந்த மறையோர்களைச் சேர்த்துக்கொண்டு ஜபம் நடத்தலாயினன். ஸித்தார்த்தகனும், மாஸோபவாஸியும் அவன் விரும்பி உடன்கொண்ட மறையோரும் இந்துசர்மனின் சாக்ஷாத் சிஷ்யர்கள். ஆதலால் என்ன நோக்கத்துடன் அவர்கள் அவ்வேலை செய்ய ஒப்புக்கொண்டனர் என்பது நாம்சொல்லாமலே விளங்கும். மாஸோபவாஸி சாணக்யன் வரவை எதிர்பார்த்துக் கொண்டும், ஜப ஹோமங்களை செய்வது போல் நடித்துக் கொண்டும் அப் பர்ணசாலையில் இருந்தான். ஏற்க.

ராக்ஷஸன் செய்தியைச் சிறிது கவனிப்போம்: தியானத்தில் இருந்த பௌத்த சந்யாசியை வெளியிலனுப்ப தாக்ஷிண்யப் பட்டான். பிறகு சிறிது யோசித்து "சந்யாசி பேரில் சந்தேகங்கொள்ளல் பெரும்பாவம். லௌகிக விவகாரத்தால் இவனுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லையாதலால் இவன் இங்கிருத்தலிற் பாதகமில்லை" என எண்ணி ராயஸக்காரர்களை நோக்கி குலூத, மலய, காசமீர, சிந்து, பாரஸீக, காந்தார, காம்போஜ தேசாதிபதிகளிடம் நமது அந்தரங்க மந்திரிகளிற் சிலரை வர்த்தகர்-வேஷத்தரிதர், அவர்களிடம் பிரீதியாக நடந்து அங்குள்ள ராஜ்ய விசேஷங்களை அறிவிக்குமாறு நியமித்திருக்கிறோமல்லவா? அவர்களுக்கு "நீங்கள் அடுத்திருக்கும் அரசர்கள் நமது விரோதியான சந்திரகுப்தனுக்கு உதவியாக வரும் பர்வதேசன் கீழ்ப்பட்டவர்கள். அவர்கள் பர்வதேசனுக்கடங்கித் தண்டெடுத்து வருவது உங்களுக்குத் தெரியுமே. இச்சமயம் பொருளைப்

பொருமெனக் கருத வேண்டாம். எவ்விதமேனும் அவர்களை வசப்படுத்தி சைகோபாயத்தாலேனும் சத்துருபதனைக் கொல்க. இது முடியாவிடில் பர்வதேசனை அவர்கள் விரோதிக்கவும் நந்தர்களுடன் சேரும்படியும் செய்யுங்கள். இதுவும் முடியாவிடில் எவ்விதத்திலேனும் மனஸ்தாபமுண்டாக்கிப் பர்வதேசனின்றும் பிரிந்து தமதூர் திரும்பும்படி அவ்வரசர்களைச் செய்ய உங்கள் முழுச் சாமர்த்தியத்தையும் காட்டுங்கள். இதுவும் முடியாவிடில் நந்தஸேனைக்கும் பர்வதேசசேனைக்கும் யுத்தம் நடக்கும் காலையில், நமது ஸைந்யத்தின் மீது கை கலவாமல் இருக்கும் யுக்தியைச் செய்யுங்கள். இங்ஙனம் செய்வீராயின் பர்வதேசன் எங்களால் இறப்பது திண்ணம். ஸ்வாமி பக்தியுள்ளவர்களாகிய உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. பர்வதேசன் இறந்ததும் அவனது தேசகோசாதிகள் உங்களதே.'' என்று தனித்தனியாகக் கடிதம் எழுதுங்கள் என்றான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

ஆத்திசூடி வெண்பா.

'ஓதாதுணர்ந்த மூதாட்டி' யாராகிய நமது ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய சிறு தொடர் நீதி வாக்கியங்களை முறையே கடைசி அடியில் அமைத்து, அதன் கருத்திற்கு இணங்க நல் உதாரணங்களை வகுத்து, என்னால் இயற்றப்பட்ட வெண்பாக்களுக்கு, மேலே கண்ட பெயர் புனைய முன்வந்தேன். உலகம் உய்ய உதித்தருளிய ஔவையாரின் அருள் வாக்கியத்துடன், என் புனமொழியும் சேரும்படி அமைத்த பெரும் பிழையைப் பாலொற்றுமை யொன்று கொண்டும், அவ்வினையினால் மனம்பெற எண்ணிய என் பேதைமைக் கிரங்கியும, அரும்புலமைப் பெரும்பண்பார்ந்த நல்லோர், பொறை பாராட்டி அன்பினை நயக்குமாறு வேண்டுகின்றேன்.

நூல்.

ஔவையருள் வாக்கை அகங்கொண்டே என்பிறவிப்
பௌவமறுத் துற்றேன் பதம்.

நாடிழந்து கானகத்தே நண்ணியும்அப் பாஞ்சாலி
தேடி அமுதிட்டனளால் தெய்வமறை—பாடித்
திறந்தருபன் னீரா யிரவர்க்கும்; தேர்ந்தே
"அறஞ்சேயவி ரும்"பென் றமை.

[(உரை):— நாடு இழந்து – (துர்யோதனுதியருடன் சூதாடி அரசுரிமைக்கு உரிய) தேசங்களை இழந்து; கானகத்தே – (இருந்து வசித்தற்கரிய) காட்டில்; நண்ணியும்–(அவர்கள் பன்னிரண்டு வருஷம் கழிக்க வேண்டுமெனும் நிபந்தனைப்படி) வந்தடைந்தும்; அப்பாஞ்சாலி–அந்த ஒப்பற்ற பாஞ்சால ராஜனது தவப் புதல்வியாகிய திரௌபதை; தெய்வமறை–தெய்வத் தன்மை வாய்ந்த நான்கு வேதங்களையும், பாடி–பாராயணம் செய்தலால்; திறம் தரு–திறமை வாய்ந்த (விற்பன்னர்களான) பன்னீராயிரவர்க்கும் – பன்னீராயிரம் பிராமணர்களுக்கும்; தேடி அமுதளித்தனள் – சூரியனை வேண்டி அருந்தவம் புரிந்ததாற் கிடைத்த "அக்ஷய பாத்திரம்" என்னும் பொற்கிண்ணத்தின் உதவியால் (தினமும் உச்சிப்போதில்) அமுதே எனும்படியான (அறுசுவை) உண்டி ஊட்டினள்; தேர்ந்து – இவ்விஷயத்தை நன்காய்ந்து; 'அறம் செய விரும்பு' என்று – 'தருமம் செய்ய நீ ஆசை கொள்' எனும் பொருள்பட அருளிய சிறு தொடர் நீதியின் அருமையை அறிந்து; அமை–தக்க வாறு செய்க.]

மகாபாரதத்தில் துரியோதனுதியரின் வஞ்சத்தால் நாடு முதலிய அனைத்தையும் இழந்து வனவாசம் செய்யப்புகுந்த பாண்டவரின் தரும பத்தினியாகிய திரௌபதை தனக்கு அறஞ் செய்தலில் உள்ள பேரவாவினுல் ஆதவனை உபாஸித்து அரிதிற் பெற்ற ஓர் பொற் கிண்ணத்தினுல் தம்மைப் பிரிவாற்றுது தொடர்ந்து வந்த பன்னீராயிரம் வேதியர்கட்கும் தினமும் அறுசுவை புண்டி யளித்து வந்தா ளெனும் சரிதம் ஈண்டுக் குறிப்பாம்.

என்னே? அறத்தினைச செய்யும் இயல்பு குன்றிய விடத்து, உண்மை விருப்பம் ஒன்று மட்டில் உண்டாகில், அவ்வறம் புரியும் வழியும் எளிதிற் கைகூடுவதாகின்றது. அதுபற்றியன்றோ, மேதை மூதாட்டியார் 'அறஞ் செய்' என விதியாமல், 'செய விரும்பு' என்றனர். புகழ் கருதியோ, பிரதிபலம் வேண்டியோ, மனத்தில் விருப்பின்றிச் செய்யும் அறத்தினும், செய்யும் இயற்கை எய்தாவிடத்து, 'செய்தல் வேண்டு' மென்னும் ஆசை உண்டாதலே சிறப்பென்பதும் குறிப்பாம்.

தவிர, அறம் செய்யும் உரிமையும் வலிமையும் பெறுவாலிபர்களும், மனத்தாலேனும், விருப்பத்தினை யுட்கொள்ளல் வேண்டும். ஆகவே,

மனப்பழக்கத்திற்கு உரியதாக்கும் அவ்விருப்பம் நாளடைவில் செய்கைக்கு உற்ற தாதலும் உறுதியே.

அன்றி, எப்பொருளை யார் உண்மையாய் விரும்பினும், அப்பொருள் இம்மையிலோ அன்றி மறுமையிலோ தவறாது வந்தடைந்து பயன் தருமென்பது தொன்னூற்றுணிபாம். இனி, புருஷார்த்தம் நான்கிற்கும் முதன்மையாவது தருமமேயாதலின் அத்தருமமே முதற்கண் வலியுறுத்தத் தக்க தாயிற்று என்பதும், முத்தி வீட்டினை யடைய விரும்புவோ ரெவரும் அறத் திறவுகோல் கொண்டே, மனத தாளினைத் திறத்தல் வேண்டுமென்பதும் பெறப்படும்.

(இன்னும் வரும்.)

அசலாம்பிகையம்மாள்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(52-ம் பக்கத் தொடர்ச்சி.)

தள்ளாப் புலவரை "யான் தாங்ககிலேன் போமி"னென்றோர்
வள்ள லுரைத்ததென்கொல் வள்ளுவரே!—விள்ளிற்
சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. (அ)

(அ-ம் முதலியன):— தள்ளா-நீக்கற்கரிய, தாங்ககிலேன்-காப்பாற்ற முடியவில்லையே, வள்ளல்-கொடையிற் சிறந்த அரசன், விள்ளில்-சொல்லுமிடத்து, சிறப்பு-திருவிழா, பூசனை-நித்தியபூஜை; செல்லாது-நடவாது, வானம்-மழை, வறக்குமேல்-பெய்யாதாயின்.

வள்ளல் புலவரைப் போமின் என்ற வரலாறு:— சங்கக் காலத்திலிருந்த பாண்டியருள் ஒருவன், தனது நாடு பன்னிரண்டு வருஷம் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட காலத்தில், புலவர்களைக் கூவி "வம்மின்! யான் உங்களைப் புறந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர், நுமக்கு அறிந்தவாறு புக்கு நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின் என்றன" என்று இறையனார் அகப்பொருளிற் கூறியுள்ள விஷயமே இங்குக் குறித்ததாம்.

வீதலுறு நாயூனை விண்ணும் படைக்கவல்ல
மாதவத்தோன் தின்றதென்னோ? வள்ளுவரே!—ஓதுங்கால்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். (கூ)

(அ-ம் முதலியன):— வீதல் உறு-இறந்த, ஊன்-மாமிசம், மாதவத்தோன்-விசுவாமித்திரன்; தங்கா-நிலைநிற்கமாட்டா, வியன்-பெரிய, உலகம்-உலகில், வானம்-மழை, வழங்கு-பெய்.

விசுவாமித்திரன் நாய் ஊன் தின்றது:— காதியின் புதல்வரும் தவவலியால் வேதியரானவருமான இவர் வறட்காலமொன்றிற் பசிக்கொடுமை யாற்றாது நாயூன் உண்டனர். இதன் வரலாறு மணிமேகலை பாரதம் முதலிய நூல்களிற் கண்டு கொள்க.

பெய்யமழை, இந்திரன்பாற் பெட்டான், பொருநையொடு
வையையுடை யானுமென்னோ? வள்ளுவரே!—உய்யவே
நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. (ய)

(அ-ம் முதலியன)— பெட்டான்-விரும்பினான், பொருநை-தாமிரபரணி, வையை-வைகைநதி, உய்ய-பிழைக்குமாறு, அமையாது எனின்-பொருந்தாது என்போமானால், வான்-மழை, இன்று-இல்லாமல், ஒழுக்கு-நீர் இடையறாது வீழ்தல்.

இந்திரன்பால் மழை வேண்டியது.— மதுரையை ஆண்ட நான்காவது பாண்டியனாகிய உக்கிர குமார பாண்டியன், தனது பாண்டிய நாடு மழையின்றித் தவித்த காலையில், இந்திரனிடம் சென்று, மழை வேண்டிய விவரத்தைத் திருவிளையாடற் புராணத்தினின்றும் அறிக.

மூன்றும் அதிகாரம்.

நீத்தார் பெருமை.

புண்டரிகத் தாளார் புதல்வாடிப் போதணிந்தான்
மண்டின்ற மாலுமென்னோ வள்ளுவரே!—தண்டா
ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. (க)

(அ-ம் முதலியன.):— புண்டரிகத் தாளார் புதல்வர்—தாமரைமலரில் வசிக்கும் பிரமனது மானச புத்திரராகிய நாரதரது; அடிப்போது—பாதமலர்; மண் தின்ற மால்—பூபாரம் நீக்கிய விஷ்ணு; தலைடா—நீங்காத; ஒழுக்கத்து—தமக்குரிய வருணாசிரம தர்மங்களினின்று; நீத்தார்—முற்றத் துறந்த முனிவர்; பெருமை—பெருமையை; விழுப்பத்து... துணிவு—சிறந்த பொருள் யாவினும் தலை சிறந்தது இதுவே என விரும்பும் நூல்களது துணிவு.

பரம பாகவதரான ஸ்ரீமத் நாரதமா முனிவரது பாதபத்மங்களைப் பத்மநாபன் தலையிற் பரித்து சூடிய பாகவத புராண விஷயமே இங்குக் குறித்துள்ளதாகும்.

காதற் பரவையுழைக் கண்ணுதலே தூதானன்
மாதவத்தோன் மாண்பளவென்? வள்ளுவரே!—ஒதின்
துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்(து)
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. (உ)

(அ-ம் முதலியன.):— காதல் — சுந்தரமூர்த்தி நாயனார் காதல் கொண்ட; உழை — இடம்; கண் நுதல்—நெற்றிக் கண்படைத்த சிவபெருமான்; துணை — அளவு; வையத்து—இவ்வுலகில்; எண்ணிக்கொண்டற்று—எண்ணிக் கணக்கிடல் போன்றது. "கொண்டால் அற்று" என்பது "கொண்டற்று" எனத் திரிந்தது.

பரவையுழைப் பரமன் தூதானது:— ஆரூரிலிருந்த தம் முதல் மனைவியரான பரவையார் அறியாமல், சுந்தரமூர்த்தி நாயனார், ஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து, அங்குச் சிலகாலம் தங்கிப் பிறகு ஆரூர்க்குத் திரும்பினர். ஒற்றியூரில் நிகழ்ந்த விஷயம் எங்ஙனமோ அறிந்த பரவையார் சினந்து 'நாயனார் என்னிடம் வந்தால் உயிர் விடுவேன்' என்னலும், நாயனார் வருந்திப் பரமசிவனிடம் தமது குறையிரந்து வேண்ட, அவர் அர்ச்சனை செய்யும் ஆதிசைவர் வேடம் பூண்டு, அர்த்த ராத்திரியில், இருமுறை பரவையார் பால் தூது சென்று நயமொழி புகன்று இருவரையும் சேர்ந்து வாழச் செய்தனர் என்பதே.

தன்னந் தனிவசிட்டன் தானேபல கோசிகர்க்கு
மன்னர்கோன் தோற்றதென்கொல்? வள்ளுவரே!-உன்னின்
இருமை வகைதெரிந்(து) ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (௩)

(அ-ம் முதலியன): தானை-சேனை, மன்னர்கோன்-விசுவாமித்திரன்: கோசிகன்; என்கொல்-யாது காரணம், உன்னில்-ஆராயின், இருமை வகை-பிறப்பு, வீடு என்னும் இரண்டனது துன்ப இன்ப வகைகளை, ஈண்டு-இப்பிறப்பில், அறம்-தவம், பெருமை உலகு பிறங்கிற்று-பெருமையே உலகில் உயர்ந்து விளங்குவதாகும்.

மன்னர்கோன் தோற்றமை:— காதிமகன், கௌசிகன் என்னும் விசுவாமித்திரன், அரசனாயிருந்த காலத்தில் ஓர் நாள் வேட்டையாடிக் களைத்துத் திரும்புகையில் வசிஷ்டர் தமது காமதேனுவைக் கொண்டு அவனுக்கும் அவனது சேனைக்கும் சம்பிரமமாக விருந்தளித்தனர். இக் காமதேனுவை அபகரிக்கக் கௌசிகன் தனது சைநியத்தை அனுப்ப, அச் சைநியமுழுவதும் காமதேனுவினின்றுந் தோன்றிய வீரர்களால் அழிந்தது. பிறகு, கௌசிகன் சினந்து வசிஷ்டரையே எதிர்த்துப் பல அம்புகள் தொடுக்க, அவர், தமது பிரமதண்டத்தை நாட்டித் தவத்திலிருக்கவும், அத்தண்டம் படைகள் யாவையும் விழுங்கிக் கௌசிகனையே துன்புறுத்தியது. இவ்வளவும் பிரமதேஜஸுக்கு உரிய சக்தி என்று உணர்ந்து அறிந்து, கௌசிகன் தவமேற் கொண்டு பிரமரிஷி யாகுமாறு வனம் சென்றான். இதன் வரலாற்றை ராமாயண பாகவதங்களில் விரிவாகக் கண்டு உணர்க.

ஐந்தருவாழ் மங்கை, யருகுற்றும், இந்திரனார்
மைந்தனினங் கான்பயனென்? வள்ளுவரே!—நந்தா
உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. (௪)

(ஐ-ம் முதலியன): ஐந்தரு-அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் ஆகிய பஞ்சதருக்களின் நிழலில்; மங்கை-ஊர்வசி, இந்திரனார் மைந்தன்-அர்ச்சுனன், இணங்கான்-(அவளைச்சேர) சம்மதிக்கவில்லை, நந்தா-குறையாத, உரன்-அறிவு வலிமை, தோட்டியான்-அங்குசத்தால், ஓர் ஐந்தும்-பஞ்சேந்திரியமாகிய யானைகளை, காப்பான்-தனக்குத் தீங்கு செய்யாதபடி தடுத்துத் தற்காத்துக்கொள்பவன், வானென்னும் வைப்பு-மோக்ஷலோகம்.

ஐந்தருவாழ் மங்கை அருகுற்றும் இந்திரனார் மைந்தன் இணங்கான்மை:—பாண்டவர்கள் வனவாசம் செய்தகாலத்தில் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றவுடன், இந்திரன் அவனைத் தேவலோகத்திற்குத் தனது பகைவரை அழிக்கும் நிமித்தம் அழைத்துச் சென்றான். அங்கு ஊர்வசி என்னும் தேவதாசி அவன் அழகைக்கண்டு மயங்கிக் காமுற்றாள். ஆயி

னும் அவன் தன் தந்தையாகிய இந்திரனிடம் இருப்பவன் ஆதலின், அவளைத் தாய் எனக்கொண்டு தாள்களில் விழுந்து வணங்கி நின்று, அவன் விருப்பிற்கு உடன்படாதிருக்கின்றான்" என்பதே.

ம. கே.

விநோதக் கூற்று.

ஒரு பெண்பாடசாலையில் ஓர் உபாத்தியாயருக்கும்
ஒரு சிறுமிக்கும் நடந்த சம்பாஷணை.

சிறுமி.— புள்ளையார்கு 'விக்கின ஈசுரன்' இன்னு என் ஸார் பேர்?

உபாத்:- சிவன் கையிலே ஒரு பழமிருந்தது. அதெப் புள்ளயாரும் சுப்ரமணியரும் கேட்டா. "ஆர் இந்த லோக முழுக்கச் சுத்தி வாராளோ அவாளுக்குத்தான் பழம்" இன்னார் ஸாமி. உடனே சுப்ரமணியர் மயிலிலேறிச் சுத்த ஆரம்பிச்சார். புள்ளயார் "லோக முழுக்க ஒங்களுக்குள்ளே அடங்கிப் போச்சு. ஆனத்தனாலே ஒங்களெச் சுத்தினா அதெச் சுத்தின மாதிரி தானே" இன்னு ஸாமியெச் சுத்தினார். ஸாமிக்கு ஸந்தோஷம் வந்துடுத்து. பழத்தெ புள்ளயார்க்கே குடுத்துட்டார். புள்ளயார் அதெத் திங்க ஆரம்பிச்சாரோ இல்லியோ, வந்துடுத்து கோபம் சுப்ரமணியருக்கு. லபக்குன்னு சுப்ரமணியர் தொண்டெயப் புடிச்சார். அது விக்கிடுத்து தொண்டெலே. தொண்டேலே விக்கினதால் அன்னு முதல் 'விக்கினேசுவரன்' இன்னு புள்ளயார்க்குப் பேர்வந்தது. அவ்வளவு தான்.

கோ. பெருந்திரு.

விடுகதை வினாவுக்கு விடை.

நெடியஇசைத் தம்பூரே செல்லம்மாள் சேர்த்த
விடுகதைக்குத் தக்க விடை.

கனகாம்பிகை.

[தம் பெயரை வெளிப்படுத்த விரும்பாத ஒருவர், "சென்ற சஞ்சிகையில் ஸ்ரீமதி செல்லம்மாளது விடுகதைக்கு, 'யானை' என்பது விடை" யென்றும், "'படம்' என்பதற்கு 'நெற்றிப் பட்டம்' என்று பொருள் கொண்டு பார்க்க" என்றும் கூறியிருக்கின்றனர். இவ்விடையும் முற்றிலும் சரியே. ஆயினும் 'நாகம்' என்ற சொல் 'யானை'யையும் குறிக்குமாறு தற்செயலாய் அமைந்ததனால் "தம்பூரே" தக்க விடையாகும். இனி யானை, பாம்பு, தம்பூர்—இம்மூன்றுக்கும் சிலேடையாக ஓர் வெண்பாவை நமது நேயர்கள் இயற்றியனுப்புமாறு வேண்டுகிறோம்.— பத்திராதிபர்.]

இரு சகோதரிகளின் பிரசங்கங்களைப் பற்றிய வியப்புக் கவிகள்.

பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மையும் அவரது சகோதரி ஸ்ரீமதி பதுமாவதி அம்மாளும், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தில் முறையே "செய்வன திருந்தச் செய்" என்பதையும் "அடக்கம்" என்பதையும் பற்றிப் பிரசங்கம் செய்தகாலையில் அவ்வமயங்களில் அக்ராஸனம் வகித்த,

ஸ்ரீ: ம. கோபாலகிருஷ்ணையர் கூறியவை.

பேணியெமக் கறிவுறுத்தப் பிரசங்கம் *பெய்ததுபோற் பிரசங் கம்யாம்
§காணிய'செய் வனதிருந்தச் செய்'எனுமில் விடயத்தைக் 0கவினச்செய்த
வாணியருள் வாய்ந்திலகு மதியூகி பண்டிதைஸ்ரீ மதியாம் கிருஷ்ண
வேணியமை மேதினிக்கோர் ○வில்விளக்கா நீடூழி விளங்கி வாழி.

*பிரசம்—தேன், கம்—ஆகாயம். §காணிய—காண, 0கவின—அழகாக, ○வில்—பிரகாசத்துடன் கூடிய.

*'இதுமா வதிசய'மென் றெண்ணப்0பெண் கல்வி
யதுமா வதியார்க்குமென்ன "அடக்கம்"
§மதுமா வதிகுயிலே மான உரைத்தாள்
பதுமா வதியின பரிந்து.

*இது மா அதிசயம். 0பெண்கல்வியதும் ஆவது யார்க்கும் என்ன. §மது மா வதி குயிலே மான—இனிய மாமரத்தில் வசிக்கும் குயிலைப் போன்று.

"மாதர் கடமை"யைப் பற்றி ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மையும், "துணை"யைப் பற்றி ஸ்ரீமதி பதுமாவதியம்மாளும் பிரசங்கம் செய்த போது கூறியவை.

மாதர் கடமை மதிப்புறச்செய்ய நந்தெணிரை
மாதர் கடமையெனு மாந்தர்களும்—மாதரார்
"மாதர் கடமை" "துணை" மாணவுரைத்தார் வாழ்த்துவமிம்
மாதர் கடமை மதித்து.

1. மாதர்கடமை—மாதர்கள் தமை. 2. மாதர்கடமை – மாதர்கள் தம் மை(ஆடுகள்); மாந்தர் – மூடர். 3. "மாதர் கடமை," "துணை"— மாதர் கடமையையும் அவர்கள் கொள்ளத்தக்க துணையையும் பற்றிய. 4. மாதர்கடமை—மாதர்கள்தம்மை அல்லது மாதர்க்கு நாம் செய்ய வேண்டிய கடமையை.

(இன்னும் வரும்.)

விவேகோதயத்தைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்.

விவேகோதயம்:— இப் பெயர் பூண்ட பத்திரிகை யொன்று மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. பத்திராதிபர் நெடுநாட்களாகத் தமிழ்ப் பாஷையின் அபிவிருத்தியையும் தேசத்தின் முன்னேற்றத்தையும் கருதிப் பாடுபட்டுவரும் பிரஹ்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களாவார். காகிதப் பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டு பத்திராதிபர்களும், பதிப்பாசிரியர்களும் திண்டாடுகின்ற இக்காலத்தில், பழைய பத்திரிகைகளிற் பல, நின்றும், சில, பக்கங்களையும் அளவையும் குறைத்தும் வருகின்ற இக்காலத்தில், மிகக் குறைந்த சந்தாவுக்கு, 'மிகமிக அரிய விஷயங்களை அடக்கியுள்ள விவேகோதயம் கொடுபடுவது, ஆசிரியருடைய பொதுநல நோக்கத்தையும் மனத்துணிவையும் எடுத்துக் காட்டுகின்றது. இப்பொழுது நம்முன் இருக்கும் முதலாவது பகுதியில் மகா வித்வான் அரசஞ் சண்முகனாருடைய "வள்ளுவர் நேரிசை" யென்னும் பெயரிய வெண்பாக்கள் சிறந்து விளங்குகின்றன. இன்னும் "இரவலமணிகள்" "சாணக்ய சாகஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம்" முதலியவை நன்றாயிருக்கின்றன.

ஞானபாநு, சென்னை.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தாரின் நன்முயற்சியால் வெளிவந்திருக்கும் விவேகோதயத்தின் முதல் சஞ்சிகை வரப்பெற்றேன். அதில் வரைந்துள்ள விஷயங்களையும் பத்திராதிபரின் ஊக்கத்தினையும் நோக்கிப் பெரு மகிழ் வுற்றனன். 'விவேகோதயம்' என்னும் பெயருக்கு, அதனதிபர் கூறிய விசேடவுரைகளின் இறுதியில், "ஏதேனும் ஒரு பெயரிட்டுத் தீரவேண்டியிருத்தலால், இப்பெயர் இடலாயிற்று" என வரைந்துள்ளார். உண்மையில் யான் அதனை ஏற்கவில்லை. என்னையெனின், விவேகமே மாந்தரிடத்து இயற்கையால் அமைந்துளதெனினும், அஃது அநேகவிடத்து, அத்தமித்தது போன்று புறத்தே காணப்படுதலின், அவ்வாறு அத்தமித்த அறிவை மீட்டும் மீட்டும் உதிக்கச் செய்தல் இயற்கையேயாம். அத்தகைய உதயமும் எக்காலத்தும் மாணவராம் வாலிபர் மூலம் தோன்றி யொளிர்தரக் கூடியதன்றி, ஏனைய முதியோர்பாலன்று. ஆகவே, இப்பெயர், காரண இடுகுறிப் பெயராகவும் காணப்படுகின்றது. இஃது இனிது தழைத்து எப்பாலும் பரவி இன்பம் புரிவதாக.

அசலாம்பிகையம்மாள்.

சமாசாரக் கொத்து.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்:— (1) இதன் 15-ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் வருகிற மேயீ நடைபெறும்.

(2) இச் சங்கத்தின் கௌரவ அங்கத்தினராக, பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையும், ஸ்ரீமதி வி. பாலம்மாளும் இருந்து வருவது நமது பத்திரிகா நேயர்கள் அறிவர். இப்பொழுது ஸ்ரீமதிகளாகிய பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி அம்மையும், அவரது சகோதரி பதுமாவதி அம்மையும், இதன் கௌரவ அங்கத்தினராகியுள்ள விஷயத்தை ஊக்கத்துடன் அறிவிக்கின்றோம்.

*　　*　　*　　*

சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் நமது பத்திரிகையின் உதவிப் பத்திராதிபராக வருகிற மேயீ முதல் இருப்பர்.

*　　*　　*　　*

மாற்றுப் பத்திரிகைகள்:— வித்யாபாநு, வைசியமித்திரன், திராவிடாபிமானி, நாகை நீலலோசனி, பாண்டியநேசன், விவேகபோதினி, விவேகசிந்தாமணி, வர்த்தகமித்திரன், ஆனந்தபோதினி, பூர்ணசந்திரோதயம், ஞானபாநு, சக்ரவர்த்தினி, செந்தமிழ், சற்குரு, சுகாபிவிர்த்தினி, விஸ்வகர்மகுலோபகாரி, உதயதாரகை, பெண்கல்வி, யதார்த்தவசனி, சுதேசபக்தா— இவைகளை அனுப்பிய பத்திராதிபர்களுக்கு நன்றிகூறுகிறோம். பிறகும் நமது பத்திரிகைகளை அனுப்பி வருமாறு வேண்டுகிறோம்.

*　　*　　*　　*

வருஷோத்ஸவக் கொண்டாட்டம்:—இம்மாதம் 16,17உகளில், சாத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் வருஷ பூர்த்தி மகோத்ஸவம் வெகு விமரிசையாகச் சாத்தூரில், கொண்டாடப்பட்டது. முதல் நாள் கூடிய மகாசபையில் 'விவேகோதய'ப் பத்திராதிபர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் அக்ராஸநத்தின்கீழ் ஸ்ரீவில்லிப்புத்தூர் வக்கீல் ஸ்ரீ ஜி. நல்லகுற்றாலம் பிள்ளை பி. ஏ. 'தமிழ் மொழியின் தொன்மை, அருமை'களைப் பற்றியும், சாத்தூர் வக்கீல் ஸ்ரீ எஸ். விசுவநாதையா 'ரவீந்தர நாத் டாகூரின் 'சாதனம்' என்ற நூல் ஆராய்ச்சியைப் பற்றியும், சிவகாசித் 'திருஞானசபை'யைச் சேர்ந்த ஸ்ரீ சிவகுருநாத பிள்ளை 'அறம்' என்பதைப் பற்றியும், மதுரைக் காலேஜ் உதவித் தமிழ்ப் பண்டிதரும், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத் தங்கத்தினரும் ஆகிய ஸ்ரீ நா. கனகராஜையர் 'சங்கங்கள்' என்பதைப் பற்றியும், உபந்யாஸம் செய்தனர். அக்ராஸநம் வகித்த ஐயரவர்கள், வருடாந்த அறிக்கையில் தாம் கண்ட விசேஷங்களைப் பற்றியும், உபந்யாஸ நயங்களைப் பற்றியும் பேசி, அத்தந்த விஷயங்களைப் பற்றித் தாம் அறிவிக்க வேண்டியிருந்தவற்றை அறிவித்துச் சபையை வாழ்த்தினர். இவ்வாழ்த்துப் பாக்கள் வருமாறு:—

சுப்பிரமணியன் நன்கு தோற்றுவித்(து), ஆன்றோராய
விப்பிர குலத்தோரால்முன் விருத்திசெய் தமிழை, இன்னே
*சுப்பிர மணியன் தோன்றித் தோமற விருத்திசெய்தான்
விப்பிர ரோமெற் றோரும் விருப்புடன் ஏற்கு மாறே.

---

*சுப்பிரமணியன்:—சுப்பிரமணிய சுயிநா

சாத்தூர்த் தமிழ்ச்சங்கக் கான் முளையைச் சங்கரனார்
காத்தூறு நீக்கிக் கடைக்கணிக்க;—பார்த்தூறு
சங்கத் தமிழ்ப்புலமை சான்றோரைத் தந்திங்கே
எழுகும் பரப்பி இசை.

அக்ராஸனம் வகித்த ஸ்ரீ ஐயரவர்கள் 17உ அதிஅவசரமாக மதுரை போக வேண்டி வந்தமையின், ஆத்தூக்குடி சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் பொ. முத்தைய பிள்ளையவர்கள் அக்ராஸனம் வகிக்க நேர்ந்தது. ஷை பிள்ளையவர்கள் 'அறிவு' என்பதைப் பற்றியும், சிவகாசி ஸ்ரீ சிவகுருநாத பிள்ளையவர்கள் 'கல்வி'யைப் பற்றியும், ஆற்றுக்குடி ஸ்ரீ சிவகுருநாத பிள்ளையவர்கள் 'கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்பதைப் பற்றியும், பிரசங்கித்தனர். பிறகு அக்ராஸனர் கல்வியைப் பற்றியும், பாமரர்க்கு அதனைப் பயன்படுத்தும் விதங்களைப் பற்றியும், நூலாராய்ச்சியின் அவசியத்தையும் வற்புறுத்தினர்.

* * * *

ஆத்தங்குடி ஸ்ரீ சரஸ்வதி விலாச சபையின் மூன்றாம் வருட பூர்த்திக் கொண்டாட்டம்:— இது இம்மாதம் 8, 9உகளில் ஸ்ரீ எ. ரெங்கசாமி ஐயர் பி. எ. பி. எல். வின் அக்ராஸனத்தின்கீழ் இனிது நிறைவேறியது. 8உ யன்று மாலை 3-மணிக்கு பண்டிதர் ஸ்ரீ ஹரிஹரையர் கடவுள் வாழ்த்துக் கூறியதும், ஸ்ரீ எம். சுப்பராமையர் வருடாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்தனர் பிறகு, ஸ்ரீ இரத்தினேசுவரையர் 'முன்னோர் ஒழுக்க முறை'யைப் பற்றி ஓர் உபந்யாஸம் செய்ததும், எஸ். இராமசாமி, எம். இராமசாமி என்ற இருமாணவர்கள் 'குறை கூறல்' என்பதைப் பற்றிச் சம்பாஷித்தனர். அதன் பிறகு, மதுரை ஸ்ரீ வி. இராமசந்திரையர் பி. எ. பி. எல். 'குழந்தைகளும் பெற்றோர்களும' என்பதைப் பற்றியும, புதுவயலைச் சார்ந்த கடராஜபுரம் ஸ்ரீ வி. ஆர். சோமசுந்தரம் செட்டியார் 'கடவுள் வழிபாடு' என்பதைப் பற்றியும், நன்கு பிரசங்கித்தனர். இவை முடிந்ததும் எஸ். டி. நாராயணன், வி. அருணாசலம் என்ற மாணவர் இருவர் 'சபைகளால் உண்டாகும் பயன்' என்பதைப் பற்றிச் சம்பாஷித்தனர். இதன் பின்னர், 'தென்னாடும் பெண்கல்வியும்' என்பதைப் பற்றி மு. சிவப்பி என்ற மாணவி ஓர் அழகிய சிறு பிரஸங்கமும், திருச்சிப் பண்டிதர் ஸ்ரீ மு. வேங்கடசாமி நாட்டார் 'ஆசிரியரும் மாணவர்களும்' என்பதையும், காரைக்குடிப் பண்டிதர் ஸ்ரீ கோவிந்தராஜையங்கார் 'சகோதர வாஞ்சை' என்பதையும் பற்றி மகோபந்யாஸமும செய்தனர்.

9உ யன்று கூடிய மகாசபையில், பண்டிதர்களாகிய ஸ்ரீமத் அரிஹரையர் அவர்களும், ராமமூர்த்தி ஐயரவர்களும் கடவுள் வாழ்த்துக் கூறியதும், சகோதரர் சிரஞ்சீவி ஸ்ரீ பி. குமரப்ப செட்டியார் 'உதய திசை நக்ஷத்திர சங்க வரலாறு' உரைத்தனர். பிறகு, 'சிறுவர் சிறுமியரின் கடமையையும் உதய திசை நக்ஷத்திர சங்கத்தைப் பற்றியும், மதுரை ஸ்ரீ பி. எஸ். இராமசுப்பையர் பேசினர். இஃதானதும் மதுரைப் பண்டி

தர் ஸ்ரீ ஹரிஹரையர் 'நமது கடமை' என்பதைப் பற்றியும், சொக்கலிங்கம்புதூர்ப் பண்டிதர் ஸ்ரீ ரெ. ராமமூர்த்தி ஐயர் 'சான்றாண்மை'யைப் பற்றியும் சாங்கோபாங்கமாகப் பிரசங்கித்தனர். இவர்களுக்குப் பிறகு மதுரை ஸ்ரீ என். ராமசாமி ஐயர் பி. ஏ. பி. எல. 'ஐகமதயம்' என்பதையும், மதுரை ஸ்ரீ கே. சோமசுந்தரையர் பி. ஏ. பி. எல. 'சற்குரு சரணப் பிரபாவம்' என்பதையும், அக்கிராசனர் 'தற்கால நிலைமை' என்பதையும், திருமியசகுர் ஸ்ரீ ஆர், சாமிநாதையா 'வருங்கால இளைஞர்கள்'' என்பதையும், சிரஞ்சீவி, பழனியப்பன் என்ற மாணவன் 'பெற்றோர் கடமை'யையும் பற்றி உபந்யசித்தனர். இவை முடிந்ததும் எனக்குடி ஸ்ரீ வி. இராமச்சந்திர நாயுடு காரு 'மரணமும் ஜீவனின் கதியும' என்பதைப் பற்றி வெகு தெளிவாக உபதேசித்தனர். கடைசியாக, 'விவேகோதய'ப பத்திராதிபர் மதுரை ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் ''பத்திரிகைகளால் ஆகும் பயன்'' என்பதைப் பற்றிப் பாமரரும அறிந்து மகிழுமாறு பிரசங்கம் செய்ததும, மாணவர்களால் 'வியபசார விலக்குக் கோர்ட்' யாவரும் வியக்க நடை பெறறது. அநந்தரம் அபிமானிகளுக்கும் அரசாங்கத்தாருக்கும் கூறப்பட்ட மங்கல வாழ்த்துடன் சபை நிறைவேறியது.

காலம் சென்ற

ஸ்ரீமத். ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள்.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும், 'சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்சொல்லிய வண்ணம் செயல்' என்ற பொய்யா மொழியைப் பொய் மொழியாக்கிப் புகழுற்றோரும், ஹிந்து, சுதேசமித்திரன், 'நேடிவ்ஸ்டேட்ஸ் அண்ட் யுனைடெட் இண்டியா,' மதிராஸ் ஸ்டாண்டர்ட்,முதலிய பல பத்திரிகைகளை நடத்திய பரோபகாரியும், நமது மாணவர் செந்தமிழ்ச் சங்காபிமான சீலர்களுள் ஒருவருமான கனம் ஸ்ரீமான் ஜீ. சுப்மேணிய ஐயரவர்கள் ஏப்ரல்மீ 18உ பன்று தமதுஒரே மகனையும் உற்றார் உறவினரையும் பிரிந்து விண்ணுல கெய்திய தறிந்துஅத்தியந்த விசனமடைகிறோம். விசனமிகுதியால இம்மகானைப் பற்றி இப்பொழுது ஏதும் எழுதத் தோன்றவில்லை.

ஸ்ரீமாந் ஜி. சுப்பிரமணிய ஐயரது பிரிவு மதுரைக் கெட்டிய தக்ஷணமே, மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தார், ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களின் அக்ராஸநத்தின் கீழ் ஓர் விசேஷக் கூட்டம் கூட்டினர். ஐயரவர்களின் ஜீவிய சரித்திரம் அக்ராஸநர் கூறியவுடன் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன; இவை சுதேச மித்திரன், ஹிந்து முதலிய பத்திரிகைகளுக்கும், ஐயரவர்களின் அருமைக்குமாரர் டி. எஸ். விசுவநாதையர் அவர்களுக்கும் அக்ராஸநர்மூலம் அனுப்பவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

பத்திராதிபர்.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியவை.

1.	தமிழ்மொழிவரலாறு—(கலிகோ)	2—0—0
2.	நபாவதி அல்லது காணாமற் போன மகள்	1—0—0
3.	கலாவதி ஓர் புதிய தமிழ் நாடகம்.	1—8—0
4.	நாடகவியல் (ஓர் நாடகத் தமிழிலக்கண நூல்.)	0—8—0
5.	தனிப்பாசுரத் தொகை. (முதற்பகுதி)	0—4—0
	(ஜி. யு. போப் ஐயரவர்களால் ஆங்கில பாஷையிற்செய்யுளாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது:கலிகோ பயிண்டு	1—0—0
6.	பாவலர் விருந்து (செய்யுள் நூலகள் கொத்து)	0—8—0
	ஷை காலிகோ	1—0—0
7.	மதிவாணன்(புதுவதுபுனைந்ததோர் செந்தமிழ்க்கதை)	0—8—0
	ஷை (துணியட்டை யிட்டது.)	0-12—0
8.	மான விஜயம் (செய்யுள் நாடகம்.)	0—8—0
9.	ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்.	0—2—0
10	மதுரைமாலை (ஸ்ரீலபாதிபதி முதலியவர்கள் இயற்றியது)	0—1—6

வேண்டுவோர் மதுரையிலிருக்கும்'விவேகோதயம் ஆபீஸு'க்கேனும் அல்லது, "எஸ். நடராஜையர், 735 நிர். வீடு, சாக்காத் தோப்புத் தெரு, மதுரை" என்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெறுக.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்.

மனம்போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:— அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பல உபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:— இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக் கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:— இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் [illegible] நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக் கொள்ளத் தக்க விதத்தில் கூறப்பட்டுள்ளன. இது விரைவில் வெளிவரும்.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பெரம்பூர், சென்னை.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.